# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093681

1. District மாவட்டம் : விருதுநகர்   PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு விருதுநகர்   Year: ஆண்டு 2020   FIR No.: மு.த.அ. எண் 04/2020   Date: நாள் 27.10.2020

2. (i) Act சட்டம்:   Sections பிரிவுகள்: 7 of Prevention of

   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: Corruption Amendment

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: Act 2018

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 27.10.2020   Date from : நாள் முதல் 13.30 மணி   Date to : நாள் வரை 22.30 மணி

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்   Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம் (ஊராட்சிகள்) உதவி இயக்குநர் அறை (ஊராட்சி) மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், விருதுநகர். சுமார் 3½ கி.மீ தென்கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. பொன்ராஜ்   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் துரை சேர்வை

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்   (g) Address : முகவரி துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. பா. விஜயபரன், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சி) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், விருதுநகர்.

   2) திரு. க. சரவணகுமார், அலுவலக உதவியாளர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், விருதுநகர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   [illegible] தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவைபெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவைபெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் (பூமிநாதன், காவல் ஆய்வாளர்) இன்று 27.10.2020ம் தேதி
இரவு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக பணியில்
இருந்தபோது துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. க. பொன்ராஜ் அவர்கள் இரவு
சுமார் 11.30 மணிக்கு நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் விருதுநகர்
மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தில், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில்
உதவி இயக்குநர் (ஊராட்சி) அறையில் வைத்து தயார் செய்த திடீர் இணை ஆய்வு
அறிக்கை நாள். 27.10.2020 மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
திரு. விஜயகுமரன், அலுவலக அரசு வாகன ஓட்டுநர் திரு. சரவணக்குமார், ஒப்பந்தகாரர் திரு. கஜேந்திரன்
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கணக்கர்) திரு. ராமர். நெடுங்குளம் ஊராட்சி துணைத்-
-தலைவர் திரு. இராமர், நெடுங்குளம் ஊராட்சி செயலர் திரு. ரவி, உதவியாளர் மற்றும் கணினி
இயக்குபவர் திரு. [illegible], மற்றும் அலுவலக உதவியாளர் திரு. [illegible] ஆகியோர்கள் மீது [illegible] (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைப்பீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ................................
Rank: நிலை ......................No. எண் ..........

<u>விருதுநகர் ஊ.த.க.பிரிவின் குற்ற எண். 04/2020 பிரிவு 7 of Prevention of Corruption Amendment Act 2018-ன் தொடர்ச்சி:-</u> கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்களுடன் நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் வருமாறு:- அனுப்புநர் D.K.பொன்ராஜ், 49/2020, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். (குடிமைப்பொருள் வட்டாட்சியர், விருதுநகர் தாலுகா, விருதுநகர்). பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா, பொருள்: விருதுநகர் மாவட்டம் - மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், , விருதுநகர் - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர்இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டியது - தொடர்பாக. நான் விருதுநகர் தாலுகா குடிமைப்பொருள் வட்டாட்சியராக கடந்த 16.09.2020ம் தேதி முதலும், அதில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 09.10.2020ம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். இன்று 27.10.2020ம் தேதி மதியம் சுமார் 12.45 மணியளவில் விருதுநகர் தாலுகா அலுவலக வளாகத்தில் குடிமைப்பொருள் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கட்டிடத்தில் இயங்கிவரும் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆக பணிபுரிந்து வருபவர், அவருடைய அரசு வாகன ஓட்டுநர் மூலம் பஞ்சாயத்து தலைவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் நிர்வாக அனுமதி உத்தரவு நகல்களை வழங்குவதற்கு பணிக்குரிய மதிப்பீட்டில் 7% தொகையை லஞ்ச பணமாக பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.இரா.பூமிநாதன் மற்றும் காவலர்களுடன் மேற்படி ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் இணை ஆய்வு செய்ய இன்று 27.10.2020ம் தேதி பிற்பகல் சுமார் 1.15 மணிக்கு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு சென்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தின் முதல்தளத்தில் அமைந்துள்ள ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறைக்கு பிற்பகல் சுமார் 1.30 மணிக்குச் சென்று இரவு 10.30 மணிவரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

திரு.விஷ்ணுபரன் மற்றும் அவரது அரசு வாகன ஓட்டுநர் திரு.சரவணக்குமார் ஆகியோரிடமிருந்து கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக ரூ.2,06,000/-மும், ரெங்கபாளையம் ஊராட்சி துணைத் தலைவர் திரு.ராமர் என்பவரிடமிருந்து அவரது பஞ்சாயத்து பணியை நிறைவேற்றுவதற்குரிய நிர்வாக அனுமதி உத்தரவு நகலை பெறுவதற்கு ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்களுக்கு, அவரது ஓட்டுநர் திரு.சரவணக்குமார் சொன்னதன்பேரில் அவரிடம் லஞ்சமாக கொடுக்கவந்த பணம் ரூ.20,000/-மும் ஆக மொத்தம் ரூ.2,26,000/-மும், அந்த பணம் இருந்த கவர்களும், அதுதொடர்புடைய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக ஊரகவளர்ச்சி உதவி இயக்குர் திரு.விஷ்ணுபரன் மற்றும் அவரது அரசு வாகன ஓட்டுனர் திரு.சரவணக்குமார் மற்றும் திடீர் சோதனையின்போது ஆஜரிலிருந்த அனைவரும் தனித்தனியே வாக்குமூலம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் இன்று 27.10.2020ம் தேதி பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 10.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம் பின்வருமாறு. 1) ஆய்வு செய்த அலுவலகம்: ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், விருதுநகர். 2) ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம். 27.10.2020 ஆம் தேதி பிற்பகல் சுமார் 01.30 மணி. 3) ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர் திரு.பொன்ராஜ் (49/2020) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் 4) ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர் திரு.பூமிநாதன், காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு 5) ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த அரசு அலுவலர்கள்: 1) திரு.பா.விஷ்ணுபரன் (35/2020), ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊ), ஊ.வ.உ.இ.அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், விருதுநகர். 2)திரு.க.சரவணக்குமார் (50/2020), வாகன ஓட்டுநர், ஊ.வ.உ.இ.அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், விருதுநகர். 3) திருமதி.S.மாரித்தாய் (49/2020), அலுவலக உதவியாளர், ஊ.வ.உ.இ.அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், விருதுநகர். 4) திரு.பா.ராமர் (55/2020), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கணக்குகள்) ஊ.வ.உ.இ.அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், விருதுநகர், 6) ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த தனிநபர்: 1) திரு.க.கஜேந்திரன் (52/2020), த/பெ.கணேசன், ஊராட்சி ஒன்றிய பதிவு பெற்ற ஒப்பந்ததாரர், விருதுநகர் ஒன்றியம், 9/21, முத்து தெரு, விருதுநகர். விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கட்டிடத்தில் இயங்கிவரும் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆக பணிபுரிந்து வருபவர், அவருடைய அரசு வாகன ஓட்டுநர் மூலம் பஞ்சாயத்து தலைவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் நிர்வாக அனுமதி

உத்தரவு நகல்களை வழங்குவதற்கு பணிக்குரிய மதிப்பீட்டில் 7% தொகையை லஞ்ச பணமாக பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 27.10.2020ஆம் தேதி பிற்பகல் சுமார் 1.30மணிக்கு காலம்3 மற்றும் 4ல் கண்ட அலுவலர்கள் சகிதம் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தின் முதல்தளத்தில் அமைந்துள்ள ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறையில் திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறையானது விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தின் தெற்கு பார்த்த இரண்டு நுழைவுவாயில்களில் மேற்குபக்கம் உள்ள நுழைவுவாயிலில் உள்ளே நுழைந்து கட்டிடத்தின் கடைசியில் முதல்தளத்தில் தெற்குவாசலுடன் உள்ள முதல் அறையில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி அறைக்கு அருகே மேற்கு பார்த்த வாசலுடன் அமைந்திருந்த ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்)அவர்களின் அலுவலகத்திற்கு வெளியே காத்திருப்போர் அமரும் வகையில் கருப்புநிறத்தாலான கடப்பாக்கல் பெஞ்ச் சுவரை ஒட்டி இருந்தது. அதில் காலம் 5 வரிசை எண்.6 மற்றும் 7ல் கண்ட நபர்களும், காலம் 6ல் கண்ட தனிநபரும் இருந்தனர். ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறையில் காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரான ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.பா.விஷ்ணுபரன் அவர்கள் கிழக்கு பார்த்து இருந்த அவரது இருக்கையில் அமர்ந்தும், காலம் 5 வரிசை எண்.2ல் கண்ட நபரான ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் ஓட்டுநர் திரு.க.சரவணக்குமார் என்பவர், ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு வலதுபக்கம் அருகில் கிழக்கு பார்த்து நின்றுகொண்டும், காலம் 5 வரிசை எண்.3ல் கண்ட நபரான ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் திருமதி.S.மாரித்தாய் என்பவர் ஓட்டுநர் திரு.க.சரவணக்குமார் அவர்களுக்கு வலதுபக்கம் அருகில் கிழக்கு பார்த்து நின்றுகொண்டும், காலம் 5 வரிசை எண்.4ல் கண்ட நபரான ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)அலுவலகத்தின் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கணக்குகள்) திரு.பா.ராமர் மற்றும் காலம் 5 வரிசை எண்.5ல் கண்ட நபரான ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தின் உதவியாளர் மற்றும் கணினி இயக்குனர் திரு.ஆ.சூர்யபிரகாஷ் ஆகியோர்கள் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)அவர்களின் இருக்கைக்கு நேர்எதிர்திசையில் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அவர்களை பார்த்தவாறு நின்றுகொண்டும் இருந்தனர். மேற்படி உதவி இயக்குநர்(ஊ) அவர்களின் அறையானது குளிரூட்டப்பட்ட அறையாக இருந்தது. அந்த அறையின் வடக்கு கடைசியில் கேபினால் தடுக்கப்பட்ட சிறிய அறை ஒன்றும் இருந்தது. அந்த

அறைக்குள் கிழக்கு பார்த்த வாசலுடன் கூடிய கழிவறையும், அமர்ந்து சாப்பிடக்கூடிய டேபிள் ஒன்றும், பிளாஸ்டிக் சேர்களும் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்தாற்போல் 15 சேர்கள் இருந்தன. காலம் 6ல் கண்ட தனிநபர் மற்றும் காலம் 5ல் கண்ட 6 மற்றும் 7 ஆகியோர்களை, அதாவது ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு வெளியே காத்திருப்போர் அமரும் இருக்கையில் அமர்ந்திருந்த நபர்களை, ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊ) அவர்களின் அறைக்குள் அழைத்து சென்று, அவர்களிடம் அதாவது காலம் 5 மற்றும் 6ல் கண்ட நபர்களிடம் விபரம் சொல்லி திடீர் இணை ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண். 1ல் கண்ட உதவி இயக்குநர் (ஊ) திரு.பா.விஷ்ணுபரன் அவர்களையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ய அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.100/- மட்டும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (27.10.2020) செலவுக்கு கொண்டுவந்ததாகவும் சொன்னார். எனவே அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண். 2ல் கண்ட உதவி இயக்குநர் (ஊ) அவர்களின் ஓட்டுநர் திரு.க.சரவணக்குமாரை சோதனை செய்ய அவரது இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில் அனுப்புகை எழுத்தர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வெம்பக்கோட்டை என்ற காக்கிநிற அலுவலக கவர் ஒன்று இருந்தது. அந்த கவரை பிரித்து பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 22 மொத்தம் ரூ.11,000/- இருந்தது. அத்துடன் மற்றொரு பண்டலாக 500 ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 28 மொத்தம் ரூ.14,000/- இருந்தது. அத்துடன் இரண்டு 500 ரூபாய் நோட்டுக்கள் தனித்தனியாக மடித்து இருந்தது. அத்துடன் தங்கம் டெக்ஸ்டைல்ஸ், மெயின் பஜார், ஏழாயிரம்பண்ணை என்று அச்சடிக்கப்பட்ட நீலநிற பிளாஸ்டிக் கவர் ஒன்று இருந்தது. அந்த நீலநிற பிளாஸ்டிக் கவரை பிரித்து பார்க்க, அதில் 2000 ரூபாய் நோட்டுக்கள் ஒரு பண்டலாகவும், 500 ரூபாய் நோட்டுக்கள் 4 பண்டல்களாகவும் இருந்தன. அவற்றை எடுத்து எண்ணி பார்க்க, அதில் 2000 ரூபாய் நோட்டுக்கள் உள்ள பண்டலில் 2000 ரூபாய் நோட்டுக்கள் 20 மொத்தம் ரூ.40,000/-ம், 500 ரூபாய் நோட்டுக்கள் உள்ள ஒரு பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 100 மொத்தம் ரூ.50,000/-ம், 500 ரூபாய் நோட்டுக்கள் உள்ள மற்றொரு பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 60 மொத்தம் ரூ.30,000/-ம், 500 ரூபாய் நோட்டுக்கள் உள்ள மற்றொரு பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 100 மொத்தம் ரூ.50,000/-ம், 500 ரூபாய் நோட்டுக்கள் உள்ள மற்றொரு பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 20 மொத்தம் ரூ.10,000/-ம் இருந்தன. ஆக மொத்தம் ரூ.2,06,000/- இருந்தது. அந்த பணம் ரூ.2,06,000/-த்தை பற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் முழுவதும் தற்போது உள்ளதுபோலவே கத்தை கத்தையாக

உதவி இயக்குநர் (ஊ) அலுவலக படிக்கட்டிற்கு ஏறும் வழியில் தரைதளத்தில் கீழே கிடந்ததை தாங்கள் வருவதற்கு சுமார் அரைமணி நேரத்திற்கு முன்பு எடுத்து வைத்திருந்ததாகவும், அந்த பணத்தை நான் எடுக்கும்போது அருகில் யாரும் இல்லை எனவும், யாரும் பணத்தை தேடி வருகிறார்களா என்று 2 நிமிடம் அங்கேயே காத்திருந்ததாகவும், யாரும் வராததால் அப்படியே எடுத்து தனது இடதுபக்க பேண்ட்பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, என்னுடைய தனிப்பட்ட விஷயம் தொடர்பாக பேசுவதற்காக நேர்முக உதவியாளர் (பொது) அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளர் திரு.கருப்பசாமி அவர்களை சந்தித்து பேசிவிட்டு, பின்பு உதவி இயக்குநர் (ஊ) அவர்களின் அறைக்கு வந்துவிட்டதாகவும், ஆனால் தான் தரைதளத்தில் கீழே கத்தை கத்தையாக கிடந்த பணத்தை எடுத்து வைத்திருந்ததை யாரிடமும் சொல்லவில்லை என்றும் கூறினார். பின்னர் அருகில் அவரது இருக்கையில் அமர்ந்திருந்த உதவி இயக்குநர் (ஊ) திரு.விஷ்ணுபரன் அவர்களிடம் அந்த பணத்திற்கு அவரது ஓட்டுநர் திரு.சரவணக்குமார் சொன்னது பற்றி கேட்க, அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், அவ்வாறு அவர் கீழே கிடந்ததை எடுத்துவந்ததாக என்னிடம் கூறவுமில்லை என்றும் கூறினார். ஓட்டுநர் திரு.சரவணக்குமார் சொன்னது ஏற்றுக்கொள்வதாக இல்லாததாலும், உதவி இயக்குநர் (ஊ) திரு.விஷ்ணுபரன், அந்த பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், அவ்வாறு ஓட்டுநர் கீழே கிடந்ததை எடுத்து வந்ததாக தன்னிடம் எதுவும் கூறவுமில்லை என்று கூறியதாலும், அந்த பணம் ரூ.2,06,000/- உதவி இயக்குநர் (ஊ) திரு.விஷ்ணுபரன் மற்றும் ஓட்டுநர் திரு.சரவணக்குமார் ஆகியோர் கணக்கில் காட்டப்பட முடியாத பணமாக கருதி, அந்த பணத்தையும், அந்த பணம் இருந்த காக்கிநிற அலுவலக கவர் மற்றும் நீலநிற பிளாஸ்டிக் கவர் ஆகியவைகள் கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து ஓட்டுநர் திரு.சரவணக்குமாரை சோதனை செய்ய, அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் இரண்டு சாவிக்கொத்துகள் இருந்தன. அதுபற்றி அவரிடம் கேட்க, அந்த இரண்டு சாவிக்கொத்துக்களில் ஒரு சாவிக்கொத்து தான் ஓட்டுநராக இருக்கும் அரசு வாகனத்தின் வெள்ளைநிற Bolero (TN 67 G 0424) சாவிக்கொத்து என்றும், மற்றொரு சாவிக்கொத்து தன்னுடைய இருசக்கர வாகனத்தின் சாவிக்கொத்து என்றும் கூறினார். ஆகையால் அந்த சாவிக்கொத்துக்கள் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டன. தொடர்ந்து ஓட்டுநர் திரு.சரவணக்குமாரை சோதனை செய்ய, அவரது பின்பக்க வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் மணிபர்ஸ் இருந்தது. அந்த மணிபர்சில் 500 ரூபாய் நோட்டு 1ம், 20 ரூபாய் நோட்டு 1ம், 2 ரூபாய் நாணயம் 1ம், 1 ரூபாய் நாணயம் 1ம் ஆக மொத்தம் ரூ.523/- இருந்தது. அந்த பணம் ரூ.523/- பற்றி அவரிடம் கேட்க, அது தனது சொந்த பணம் என்றும், வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வரும்போதே கொண்டுவந்ததாகவும் கூறியதால், அந்த பணம் ரூ.523/-ம் மணிபர்சுடன் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், காலம் 5 வரிசை எண்.3ல் கண்ட நபரான திருமதி.S.மாரித்தாய், வரிசை எண்.4ல்

கண்ட நபரான திரு.பா.ராமர், வரிசை எண்.5ல் கண்ட நபரான திரு.ஆ.சூர்யபிரகாஷ் மற்றும் வரிசை எண். 6ல் கண்ட நபரான திரு.ரவி ஆகியோர்களை சோதனை செய்ய, அவர்களிடம் கைப்பற்றப்படக்கூடிய எந்தவித பணமோ, பொருளோ இல்லை. பின்னர், காலம் 5 வரிசை எண்.7 ல் கண்ட நபரான ரெங்கபாளையம், ஊராட்சிமன்ற துணைத்தலைவர் திரு.து.ராமர் அவர்களை சோதனை செய்ய, அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் ரெங்கபாளையம் ஊராட்சிமன்ற தலைவர், சிவகாசி என்றும், 20000% என்றும் எழுதப்பட்ட வெள்ளைநிற கவர் ஒன்று இருந்தது. அந்த கவரை பிரித்து பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 40 மொத்தம் ரூ.20,000/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் ரூ.20,000/-ம் தான் துணைத்தலைவராக இருக்கும் பஞ்சாயத்திற்குட்பட்ட நத்தம்பட்டி கண்மாய் வரத்துக் கால்வாய் ஓரத்தில் புதிய போர்வெல் அமைத்து 6 HP நீர்மூழ்கி மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி ரூ.3,70,000/- மதிப்பீட்டிலான பணிக்குரிய நிர்வாக அனுமதி உத்தரவு நகலை பெறுவதற்கு, விருதுநகர் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊ) அவர்கள் கேட்டதாக, அவரது ஓட்டுநர் திரு.சரவணக்குமார் அவர்களிடம் கொடுப்பதற்காக கொண்டுவந்ததாகவும் கூறினார். ஆகையால் அதுபற்றி ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்கள் ஓட்டுநர் திரு.சரவணக்குமார் அவரிடம் கேட்க, தான் அவரிடம் அவ்வாறு எதுவும் கேட்கவில்லை என்றும், தன்னிடமும் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்கள் எதுவும் சொல்லவில்லை என்றும் கூறினார். பின்னர், அதுபற்றி ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்களிடம் கேட்க, அவர் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். பின்னர், ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்களிடம் ரெங்கபாளையம் பஞ்சாயத்து துணைத்தலைவர் திரு.து.ராமர் சொன்ன பணிக்கு மாவட்ட ஆட்சியரால் ரெங்கபாளையம் பஞ்சாயத்து தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதி கோப்பை கேட்டபோது, அவரது இருக்கையின் முன்பிருந்த மேஜையின் இடதுபக்கம் இருந்த பண்டலாக கட்டியிருந்த கோப்பை ஆஜர்படுத்தினார். அந்த கோப்பினை பார்வையிட்டபோது, அதில் ரெங்கபாளையம் பஞ்சாயத்து துணைத்தலைவர் திரு.து.ராமர் சொன்ன பணிக்கு, அதாவது அவரது பஞ்சாயத்திற்குட்பட்ட நத்தம்பட்டி கண்மாய் வரத்துக் கால்வாய் ஓரத்தில் புதிய போர்வெல் அமைத்து 6 HP நீர்மூழ்கி மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி ரூ.3,70,000/- மதிப்பீட்டிலான பணிக்கு மாவட்ட ஆட்சியரால் ரெங்கபாளையம் பஞ்சாயத்து தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதி உத்தரவு நகல் கோப்பு உட்பட 24 நிர்வாக அனுமதி உத்தரவு அசல்கள் இருந்தன. அந்த 24 நிர்வாக அனுமதி உத்தரவு அசல்கள் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து திரு.து.ராமரின் வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் ரெங்கபாளையம் ஊராட்சிமன்ற தலைவர், சிவகாசி என்றும், 20000% என்றும் எழுதப்பட்ட

வெள்ளைநிற கவரில் இருந்த 500 ரூபாய் நோட்டுக்கள் 40 மொத்தம் ரூ.20,000/-ம், மேற்படி திரு.து.ராமர், அவரது பஞ்சாயத்து பணியை நிறைவேற்றுவதற்குரிய நிர்வாக அனுமதி உத்தரவு நகலை பெறுவதற்கு ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்களுக்கு, அவரது ஓட்டுநர் திரு.சரவணக்குமார் சொன்னதன்பேரில் அவரிடம் லஞ்சமாக கொடுக்க வந்த பணம் என்று அந்த பணம் ரூ.20,000/-ம், பணம் இருந்த வெள்ளைநிறக் கவரும் கைப்பற்றப்பட்டன. ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்களிடம் மேற்படி 24 நிர்வாக அனுமதி உத்தரவு நகல்கள்போல், இதுவரை பஞ்சாயத்து தலைவர்களுக்கு ஒப்புதல் பெற்று வழங்கிய 70 நிர்வாக அனுமதி உத்தரவு நகல்கள் ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்கள் அலுவலகத்தில் உள்ள வட்டாரவளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்று கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து திரு.து.ராமர் என்பவரை சோதனை செய்ய, அவரது சட்டை பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 12 மொத்தம் ரூ.6,000/-, 200 ரூபாய் நோட்டு ஒன்று, 100 ரூபாய் நோட்டுக்கள் 6 மொத்தம் ரூ.600/- ஆக மொத்தம் ரூ.6,800/- இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தனது மனைவியின் மருத்துவ செலவிற்காக கொண்டுவந்த பணம் என்றும் கூறியதால், அந்த பணம் ரூ.6,800/-ம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், காலம் 6 வரிசை எண்.1ல் கண்ட நபரான திரு.க.கஜேந்திரன் என்பவரை சோதனை செய்ய, ராயல் ரெடிமேட்ஸ் & டெக்ஸ்டைல்ஸ், கச்சேரி ரோடு, விருதுநகர் என்று அச்சடிக்கப்பட்டுள்ள கட்டைப்பையில் விருதுநகர் யூனியன், கூரைக்குண்டு பஞ்சாயத்து கனிமநிதியில் முறையே ரூ.45,57,000/- மற்றும் ரூ.48,76,000/- மதிப்பீட்டில் நிறைவேற்றிய பணிகளுக்குரிய அளவீட்டு புத்தகம் (அளவீட்டு புத்தகம் எண் 11/20-21, 16/20-21) மற்றும் அது தொடர்புடைய பட்டியல் (பில்) கோப்புக்கள் ஆகியவற்றின் அசல் ஆவணங்கள் இருந்தன. அதுபற்றி அவரிடம் கேட்க, அந்த அசல் ஆவணங்களை விருதுநகர் யூனியன் அலுவலக மேலாளர் திரு.மாரியப்பன் அவர்கள், ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பாளரிடம் கொடுக்கச் சொல்லி தன்னிடம் கொடுத்ததாகவும், அந்த அசல் ஆவணங்களில் ஒரு அசல் ஆவண கோப்பானது, அதாவது அளவீட்டு புத்தகம் (அளவீட்டு புத்தகம் எண். 16/20-21) தொடர்புடைய கோப்பானது தான் நிறைவேற்றிய பணிக்குரிய அசல் ஆவண கோப்பாகும் என்றும், அந்த அசல் ஆவண கோப்புகளை தனிநபர் (ஒப்பந்ததாரர்) என்ற முறையில் நானே பெற்று வந்தது தவறுதான் என்றும் கூறினார். அலுவலக அசல் ஆவணங்களை தனிநபர் கையில் வைத்திருந்ததால் சந்தேகத்தின் அடிப்படையில் அந்த அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து ஒப்பந்ததாரர் திரு.க.கஜேந்திரன் அவர்களை சோதனை செய்ய, அவரின் சட்டை பாக்கெட்டில் ரூ.1,050/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் தனது சொந்தபணம் என்று கூறியதால், அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காலம் 5 மற்றும் காலம் 6ல் கண்ட நபர்களின் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்யப்பட்டன. இந்த திடீர் இணை ஆய்வு இன்று (27.10.2020) இரவு

10.30 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே இன்று (27.10.2020) எனது தலைமையில் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தின் முதல்தளத்தில் அமைந்துள்ள ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களின் அறையில் திடீர் இணை ஆய்வு சோதனையின் போது ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.விஷ்ணுபரன் மற்றும் அவரது அரசு வாகன ஓட்டுநர் திரு.சரவணக்குமார் ஆகியோரிடமிருந்து கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக ரூ.2,06,000/-மும், ரெங்கபாளையம் ஊராட்சி துணைத் தலைவர் திரு.ராமர் என்பவரிடமிருந்து அவரது பஞ்சாயத்து பணியை நிறைவேற்றுவதற்குரிய நிர்வாக அனுமதி உத்தரவு நகலை பெறுவதற்கு ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் அவர்களுக்கு, அவரது ஓட்டுநர் திரு.சரவணக்குமார் சொன்னதன்பேரில் அவரிடம் லஞ்சமாக கொடுக்கவந்த பணம் ரூ.20,000/-மும் ஆக மொத்தம் ரூ.2,26,000/-மும் லஞ்சப்பணம் என தெரியவந்ததால், ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.விஷ்ணுபரன் மற்றும் அவரது அரசு வாகன ஓட்டுநர் திரு.சரவணக்குமார் ஆகியோர்கள்மீது பஞ்சாயத்து தலைவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் நிர்வாக அனுமதி உத்தரவு நகல்களை வழங்குவதற்கு பணிக்குரிய மதிப்பீட்டில் 7% தொகையை லஞ்ச பணமாக பெற்ற குற்றத்திற்காக வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கை, ஊரகவளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.விஷ்ணுபரன், அவரது அரசு வாகன ஓட்டுநர் திரு.சரவணக்குமார், ஒப்பந்தகாரர் திரு.கஜேந்திரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கணக்குகள்) திரு.ராமர், ரெங்கபாளையம் ஊராட்சி துணைத் தலைவர் திரு.ராமர், ரெங்கபாளையம் ஊராட்சி செயலர் திரு.ரவி, உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர் திரு.சூர்யபிரகாஷ் மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.மாரித்தாய் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து கைப்பற்றப்பட்ட பணம், அந்த பணம் இருந்த கவர்கள் மற்றும் ஆவணங்களுடன் இன்று (27.10.2020) இரவு 11.30 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (D.K.பொன்ராஜ்), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். (குடிமைப்பொருள் வட்டாட்சியர், விருதுநகர் தாலுகா,விருதுநகர்). Sir, Received a complaint and registered a case in Virudhunagar V&AC Crime No.04/2020 u/s 7 of PC (Amendment) Act 2018 on 27.10.2020 at 23.30 hrs. First Information Report (Original Copy) and complaint are submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Spl. Judge, Srivilliputhur and copies submitted to the concerned Officers. (sd).R.Boominathan, 27/10/2020, Inspr. of Police, V&AC, VNR.

Inspr of Police, V&AC, VNR.